பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
10 03 2025 **MONDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவையில் இன்று தேசிய கல்விக்கொள்கை குறித்த விவாதத்தின் போது திமுக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.
- மும்மொழிக் கல்விக் கொள்கை குறித்து தமிழக அரசுக்கு சரியான புரிதல் இல்லை என மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
- இந்தியா - ஜப்பான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று கிழக்கு **Fuji**–ல் நிறைவடைந்தது
- சத்திஷ்கர் மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. பூபேஷ் பாஹெலுக்கு சொந்தமான 14 இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை நடத்தி வருகின்றனர்
- மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு இன்று தொடங்கியது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது, தமிழக கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய மத்திய அரசின் நிதியை விடுவிக்கக் கோரி, திமுக உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தேசியகல்வி கொள்கை மூலம் ஹிந்தி திணிக்கப்படுவதாக கூறுவது தவறானது என்று தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் திமுக அரசு மாணவர்களை தவறாக வழிநடத்துவதாக அவர் குற்றம் சாட்டினார்.

மும்மொழிக் கொள்கை குறித்து தமிழக அரசுக்கு சரியான புரிதல் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

பிஎம்ஸ்ரீ திட்டத்தில் கையெழுத்திட முதலில் ஒப்புக் கொண்ட தமிழக அரசு பின்னர் திடீரென தமது முடிவை மாற்றிக் கொண்டு தற்போது எதிர்ப்பு தெரிவிப்பதாக அமைச்சர் கூறினார்.

காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதாக திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

திரு. தர்மேந்திர பிரதான் கூறிய கருத்தை திமுக உறுப்பினர்கள் ஏற்க மறுத்து அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நண்பகல் 12 மணிவரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறிய சில கருத்துக்களை திரும்பப்பெறுமாறு திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

மும்மொழிக் கொள்கையை ஏற்போம் என்று தமிழகம் எப்போதுமே கூறியதில்லை என்று திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தெரிவித்தார்.

பின்னர் பேசிய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், தாம் கூறிய கருத்துக்கள் தமிழக மக்களை புண்படுத்தும் என்று கருதினால், அந்த கருத்தை திரும்பப் பெறுவதாக கூறினார்.

>>>>>><<<<<

இந்தியா – ஜப்பான் இடையே கிழக்கு **Fuji** ராணுவ பயிற்சி மையத்தில் நடைபெற்று வந்த கூட்டு ராணுவப் பயிற்சி இன்று நிறைவடைந்தது.

கடந்த மாதம் 24ஆம் தேதி தொடங்கிய இப்பயிற்சியில், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது, நகர்ப்புறங்களில் தீவிரவாதிகள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவது, இருநாடுகளுக்கும் இடையே கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெற்றிருந்தன.

இதுதொடர்பாக ஜப்பான் பாதுகாப்புத்துறை விடுத்துள்ள அறிக்கையில் அதிக அளவில் இருநாட்டு ராணுவத்தினரும் பயிற்சியில் ஈடுபட்டதாகவும், இது ஆக்கபூர்வமாக அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவு நாளில் ஜப்பான் ராணுவத்தின் தரைப்படையில் தற்பாதுகாப்பு தாக்குதல் குறித்த பயிற்சி இடம் பெற்றிருந்ததாகவும், இருநாட்டு ராணுவத்தினரும் இப்பயிற்சியில் ஆர்வமுடன் கலந்து கொண்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

பயிற்சிகளையும் கடந்து, கலை கலாச்சார நிகழ்ச்சிகளிலும் வீரர்கள் பங்கேற்று சிறப்பித்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

நியூஸிலாந்து பிரதமர் திரு. **Christopher Luxon** ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக வரும் 16ஆம் தேதி புதுதில்லி வருகிறார்.

அவரது இந்த பயணத்தின் போது, இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பிரதமர் திரு. நரேந்தர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெறவுள்ள 10வது **Raisina** பேச்சுவார்த்தையின் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

அதன்பின், குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவையும் நியூஸிலாந்து பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

தில்லி பயணத்தை முடித்துக் கொண்டு மும்பை செல்லும் அவர், அங்கு தொழில் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தொழிலக பாதுகாப்புப் படை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள முக்கிய அமைப்புகளை பாதுகாத்து வருவதோடு, தேசப்பற்றுக்கும் சிறந்த உதாரணமாக இந்தப் படைப்பிரிவு திகழ்வதாக அவர் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தொழிலக பாதுகாப்புப் படையினர் கடமை உணர்வு மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக கூறியுள்ளார்.

அவர்களது அயராத சேவைக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

ஐ.பி.எல் முன்னாள் தலைவர் லலித்மோடிக்கு வழங்கப்பட்ட பாஸ்போர்ட்டை ரத்து செய்ய **Vanuatu** பிரதமர் திரு. **Jotham Napat** உத்தரவிட்டுள்ளார்.

லலித்மோடி ஐ.பி.எல் தலைவராக இருந்த போது நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக அவர் தேடப்பட்டு வரும் நிலையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே, லலித்மோடி தனது இந்திய பாஸ்போர்ட்டை ஒப்படைப்பதாக லண்டனில் உள்ள இந்திய தூதரகத்திற்கு ஏற்கனவே தகவல் தெரிவித்தாகவும், இந்த கோரிக்கை சட்டவிதிமுறைகளின்படி ஆய்வு செய்யப்படும் என்றும் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

சத்திஷ்கர் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. பூபேஷ் பாஹெல் மற்றும் அவரது மகன் திரு. சைதன்யா பாஹெல் ஆகியோர் தொடர்புடைய 14 இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை நடத்தி வருகின்றனர்.

முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாக கூறப்படும், மதுபான முறைகேடு தொடர்பான சட்டவிரோத பணப்பரிமாற்றம் குறித்து இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிலாய் நகரில் உள்ள சைதன்ய பாஹெலின் இல்லம் மற்றும் ராய்ப்பூர், துர்க் மாவட்டங்களில் உள்ள பாஹெலின் நண்பர்கள் வீடுகளிலும் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

>>>>>><<<<<

மக்களின் அன்றாட மருந்து செலவுகளை கணிசமாக குறைக்கும் நோக்கில் பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக சேவையாற்றி வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில் குறைந்த செலவில் தரமான மருந்துகள் தங்களுக்கு கிடைப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(வாய்ஸ் பைட் - பயனாளிகள் 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதிகளில் கடந்த மூன்றாண்டுகளாக சம்பா நெற்பயிரில் போதிய விளைச்சல் கிடைக்காததால் புதிய வகை நெல் ரகங்களை அறிமுகம் செய்யுமாறு விவசாயிகள் மாநில அரசை வலியுறுத்தியுள்ளனர்.

விளைச்சல் குறைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழு பயிர் காப்பீடு நடப்பு பருவத்திற்கு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹெக்டேருக்கு 2 ஆயிரத்து 400 கிலோ முதல் 6 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் இருந்தால் தான் தங்களுக்கு கட்டுபடியாகும் என்று தெரிவித்துள்ள விவசாயிகள் தற்போது ஹெக்டேருக்கு ஆயிரத்து 500 கிலோ வரை மட்டுமே மகசூல் கிடைப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில், மழை வெள்ளம் மற்றும் கோடை வெயிலை தாங்கும் வகையில், உயர் ரகங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் மாநில அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

பயிர் சேதம் குறித்து, ஒவ்வொரு நிலத்தையும் தனித்தனியாக ஆய்வு செய்து, இழப்பீட்டு தொகையை முடிவு செய்ய வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

>>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் பறவைகள் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வனத்துறையினர், மன்னார்குடி, மயிலாடுதுறை பகுதிகளைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் முதற்கட்டமாக நடைபெற்ற இந்த பணியில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 30 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மொஹமதன் அணி – பஞ்சாப் அணியை எதிர்த்து விளையாடுகிறது.

இந்த போட்டி கொல்கத்தாவில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<

தேசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டி இன்று பீகாரில் தொடங்குகியது.

வரும் 12ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் நீளம் தாண்டுதல், தடை ஓட்டம் உள்ளிட்ட 12 பிரிவுகளில், நாடுமுழுவதிலுமிருந்து வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த சுபாஷ்குமார் 5ஆயிரம் மீட்டர் ஓட்டப் பிரிவிலும், தேவிபாலா மகளிர் 3 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவிலும் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<